மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24ம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.01/2023
உள்
அசல் வழக்கு எண்.07/2023
-------------

பழனியம்மாள் ... மனுதாரர்/1ம் பிரதிவாதி

/எதிர்/

சத்தியாகுமார் ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு 28.06.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 28.07.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.விநாயகமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.ராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . .

.

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், வாதி 27.07.2022ம் தேதி சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பிராது தபசில் கண்ட சொத்தை மோசடி ஆவணங்கள் தயார் செய்து வாதி மற்றும் 3ம் பிரதிவாதி கிரையம் செய்துள்ளபடியால், மேற்படி கிரைய ஆவணங்கள் ரத்து செய்ய உத்தரவு பிறப்பித்து உள்ளதை மறைத்தும், வழக்குமூலம் தவறாக உற்பத்தி செய்தும் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வாதியின் அசல்

வழக்குரையை நிராகரித்து உத்தரவிட வேண்டி 28.06.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

பிராது தபசில் கண்ட சொத்தானது சாத்தூர் தாலுகா, பாப்பாகுடி கிராமம் புஞ்சை சர்வே எண்.84/4ல் ஏக்கர் 2 அளவுள்ள சொத்தானது சண்முகப் பெருமாள் என்ற சண்முகராஜ் அவர்களுக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்து ஆகும். பிராது தபசில் கண்ட சொத்துக்கு சண்முகபெருமாள் ரெட்டியார் பெயரில் பட்டா எண்.219 என்று பட்டா ஏற்பட்டு, வரி வகைகள் செலுத்தி அனைவரும் அறியும் வண்ணம் ஆண்டு அனுபவித்து வந்தார். பிராது தபசில் கண்ட சொத்தை பொறுத்து எந்தவித விருப்புறுதி ஆவணம் பிறப்பித்து வைக்காத நிலையில் தன் உடன்பிறந்த சகோதரிகளான மனுதாரரையும், சண்முகம்மாள் அவர்களையும் வாரிசுகளாக வைத்து விட்டு கடந்த 14.11.1988ம் தேதி இறந்துவிட்டார். மேற்படி சண்முகபெருமாள் ரெட்டியார் காலம் சென்ற பின்னர் பிராது தபசில் கண்ட சொத்தை சண்முகம்மாள் மற்றும் மனுதாரர் ஆகிய இருவரும் வாரிசுக் கிரமப்படி கூட்டாக ஆண்டு அனுபவித்து வந்துள்ளார். இந்த சூழ்நிலையில் சண்முகம்மாள் அவர்கள் தன் கணவர் சுப்புராஜ் மகள் பாரதி மகன் சந்திரசேகரன் ஆகியோர்களை வாரிசுகளாக வைத்து விட்டு கடந்த 09.07.2016ம் தேதி இறந்துவிட்டார். சண்முகம்மாள் இறப்பதற்கு முன்பே அவரது மகள் பாரதி 16.06.1999ம் தேதி இறந்துவிட்டார். பிராது தபசில் கண்ட சொத்தை மனுதாரரும், இறந்த சண்முகம்மாள் வாரிசுகளான சுப்புராஜ், சந்திரசேகரன் ஆகியோர் கூட்டாக ஆண்டு அனுபவித்து வந்துள்ளார்கள். இந்த நிலையில் சண்முகம்மாள் கணவர் சுப்புராஜ் இறந்துவிட்டார். அதனால் தபசில் சொத்தை மனுதாரரும், சந்திரசேகரனும் அனுபவித்து வருகிறார்கள். மனுதாரர் 1ம் பிரதிவாதி ஆவார். 2ம் பிரதிவாதி சண்முகம்மாள் 09.07.2016ம் தேதி இறந்துவிட்டார்.

பிராது தபசில் கண்ட சொத்து பாப்பாகுடி கிராமத்தில் உள்ளது. மனுதாரர்

விருதுநகர் தாலுகா, பாலவநத்தம் கிராமத்தில் வசித்து வருகிறார். மனுதாரரும், மனுதாரர் சகோதரி சண்முகம்மாள் வாரிசுகளும் சேர்ந்து பிராது தபசில் கண்ட சொத்தை விவசாயம் செய்து கூட்டாக அனுபவித்து வருகிறார்கள். வாதி பாப்பாக்குடி கிராமத்தில் பல சொத்துக்களை மோசடியாக கிரையம் பெற்றுள்ளார். சொத்துக்கு உரிமையாளர்களுக்கு தெரியாமல் சொத்து உரிமையாளர் போல் ஆள்மாறாட்டம் செய்து சொத்துக்களை கிரையம் செய்து சட்டவிரோதமாக சொத்தின் உண்மையான உரிமையாளர்களை அடியாட்கள் மூலம் அடித்து சொத்திலிருந்து வெளியேற்றுவது போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார். அதேபோல் மோசடியாக பிறப்பிக்கப்பட்ட ஆவணங்களை செல்லாது என்று விளம்புகை கோரி நீதிமன்றத்தில் வாக்கு நிலுவையில் இருந்து வந்தாலும், மேற்படி சொத்துக்களை வாதி கிரையம் பெறுவதை வழக்கமாக கொண்டுள்ளார். மனுதாரர் சகோதரர் சண்முகப் பெருமாள் ரெட்டியார் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பாப்பாகுடி கிராமம் சர்வே எண்.84/4ல் கண்ட பிராது சொத்தை ஆள்மாறாட்டம் செய்து வாதி கிரையம் பெற்றுள்ளார்.

பிராது தபசில் கண்ட சொத்தின் உரிமையாளர் சண்முகபெருமாள் ரெட்டியார் 14.11.1988ம் தேதி இறந்தவிபரம் தெரியாமல், அவர் உயிரோடு இருப்பதாக மோசடியாக ஆள்மாறாட்டம் செய்தும், ஆவணங்களை உற்பத்தி செய்தும், சண்முகபெருமாள் ரெட்டியார் பிராது தபசில் கண்ட சொத்தைப் பொறுத்து 3ம் பிரதிவாதிக்கு பிறப்பித்து தந்ததாக பிரஸ்தாபிக்கப்படும் 08.02.2022ம் தேதி பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.261/2022 கிரைய ஆவணம் பிறப்பித்துக் கொண்டுள்ளார்கள். அதன்பின்னர் மேற்படி 3ம் பிரதிவாதி, பிராது தபசில் கண்ட சொத்தைப் பொறுத்து வாதிக்கு பிறப்பித்து தந்ததாக பிரஸ்தாபிக்கப்படும் 22.04.2022ம் தேதி பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.990/2022 மூலம் கிரைய ஆவணம் பிறப்பித்துக் கொண்டுள்ளார்கள். மேற்படி மோசடியாக கிரையம் பெற்ற ஆவணத்தில் கண்ட பிராது தபசில் கண்ட சொத்தையும், வேறு சொத்துக்களையும் சேர்த்து 28.06.2022ம் தேதி ஐசிஐசிஐ வங்கி லிமிடெட், அருப்புக்கோட்டை கிளையில் அடமானம் வைத்து அடமானக் கடன் பெற்றுள்ளார். மேற்படி விபரம் பிராது தபசில் கண்ட சொத்துக்கு அருகில்

உள்ள சர்வே எண்.84/2ல் 0.07.5 ஹெக்டேர்ஸ் அளவுள்ள மயானம் செல்லும் பாதையை வாதி மறித்து கம்பிவேலி அமைத்ததாகவும், அதை அகற்றி கொடுக்க வேண்டி ராமகிருஷ்ணன் மகன் ராமசுப்பு வருவாய் கோட்டாட்சியருக்கு மனு செய்து விசாரணையில் வாதி தபசில் கண்ட சொத்தை மோசடியாக கிரையம் பெற்றுள்ளார் என்பது தெரிய வந்து, வாதியின் கிரைய ஆவணம் மற்றும் வாதியின் முன்பாத்தியஸ்தராக பிரஸ்தாபிக்கப்படும், 3ம் பிரதிவாதியின் கிரைய ஆவணங்களை ஆய்வு செய்ததில், 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தாக சொல்லப்படும் சண்முகப்பெருமாள் ரெட்டியார் அவர்களுக்கு ஆதரவாக கொடுத்த ஆதார் எண்.822 4825 1160ஐ குடும்ப அட்டையுடன் ஒப்பீடு செய்து கணினி இணையத்தின் மூலம் ஆராய்ந்து பார்த்ததில் மேற்படி ஆதார் எண் தேனி மாவட்டம், உத்தமபாளையம் முகவரியில் உள்ள அய்யப்பன் ரத்தினசாமி, சுசிலாதேவி, வெர்ஜினியா, அய்யப்பன் என்று தெரிய வந்ததால், பிராது தபசில் கண்ட சொத்தை பொறுத்து போலியாக ஆவணங்கள் தயார் செய்தும், ஆள்மாறாட்டம் செய்தும், புல எண்.84/4 நிலம் போலி ஆவணங்கள் மூலம் கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி போலி ஆவணங்களான கிரைய ஆணம் 261/2022, மற்றும் கிரைய ஆவணம் 990/2022 ஆகிய கிரைய ஆவணங்களையும் மற்றும் அதன் தொடர்ச்சியாக தானியங்கி மூலம் மாற்றம் செய்யப்பட்டு தானியங்கி பட்டாவையும், ரத்த செய்யவும் 27.07.2022ம் தேதி சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வாதி சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் 27.07.2022ம் தேதி பிறப்பித்த உத்தரவினை ஆட்சேபணை செய்து மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யாமலும், மேற்படி உத்தரவை மறைத்து அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி பிராது தபசில் கண்ட சொத்தை எப்படியாவது அபகரிக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி நியாயமான முறையில் தபசில் கண்ட சொத்தை கிரையம் பெற்றிருந்தால், தபசில் கண்ட சொத்து வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பார் மற்றும் சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பற்றி வழக்கில் தெரிவித்திருப்பார். வாதியும், 3ம் பிரதிவாதி சேர்ந்து பிராது தபசில்

கண்ட சொத்தை மோசடியாக கிரைய ஆவணம் பதிவு செய்துள்ள விபரம், சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு மூலம் தெரிய வந்ததால், வாதி மிது கிரிமினல் வழக்கு தாக்கலாகும் என்று எண்ணி வாதி தன்னை தற்காத்துக் கொள்ளும் வகையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதனால் தபசில் கண்ட சொத்தை வாதியும், 3ம் பிரதிவாதியும் மோசடி ஆவணங்கள் தயார் செய்துள்ளபடியால் மேற்படி ஆவணங்களை ரத்து செய்யக்கோரி சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் 27.07.2022ல் பிறப்பித்த உத்தரவை மறைத்தும், வழக்குமூலம் தவறாக காண்பித்தும் தாக்கல் செய்துள்ள வாதியின் வழக்குரையை நிராகரித்து உத்தரவாக வேண்டியது அவசியமானதாகும். இல்லாதுபோனால் மனுதாரருக்கு அனேக இன்னலும், இழப்பும் ஏற்படக்கூடும். வாதி வழக்கின் வழக்குமூலங்கள் மறைக்கப்பட்டுள்ளதால் வாதிக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்குமூலம் கிடையாது. எனவே, தபசில் கண்ட சொத்தை வாதியும், 3ம் பிரதிவாதியும் மோசடி ஆவணங்கள் தயார் செய்துள்ளபடியால் மேற்படி ஆவணங்களை ரத்து செய்யக்கோரி சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் 27.07.2022ல் பிறப்பித்த உத்தரவை மறைத்தும், வழக்குமூலம் தவறாக காண்பித்தும் தாக்கல் செய்துள்ள வாதியின் வழக்குரையை நிராகரித்து உத்தரவாக வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

<u>**3). எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்:-**</u>

பிராது தபசில் சொத்தானது கந்தசாமி ரெட்டியார் மகன் சண்முகபெருமாள் ரெட்டியாருக்கு பாப்பாகுடி கிராமம் பட்டா எண்.219ன்படி பாத்தியப்பட்டதாகும். ஆனால் மனுதாரர்/1ம் பிரதிவாதி சண்முகபெருமாள் (எ) சண்முகராஜ் என்று கூறியுள்ளார். பின்னிட்டு அவரே சண்முகபெருமாள் ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளார். உண்மையில் சண்முகபெருமாள் என்பவரும் சண்முகராஜ் என்பவரும் வேறு வேறு நபர்கள் ஆவார்கள். உண்மையில், சண்முகபெருமாள் என்பவரும் சண்முகராஜ் என்பவரும் ஒரே நபர் என்றால் அதற்கான

சான்றாவணத்தை மனுதாரர்/1ம் பிரதிவாதி மனுவில் இணைத்து தாக்கல் செய்திருப்பார். மேலும், மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் சண்முகராஜ் என்பவர் வழக்கிடை சொத்திற்கு வரி செலுத்தியதாகவும், அனுபவம் செய்து வந்ததாகவும் கூறியுள்ள நிலையில் அதற்கான சான்றாவணங்கள் எதையும் வழக்கில் தாக்கல் செய்யாமல் மனுதாரர்/1ம் பிரதிவாதி மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/1ம் பிரதிவாதி கூறியது போல் சண்முகபெருமாள் ரெட்டியார் 1, 2 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்று கூறியுள்ள நிலையில் அதற்கான சான்றாவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. மேலும், திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்று கூறியுள்ள நிலையில் அதற்கான சான்றாவணங்கள் எதையும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த சண்முகரெட்டியார் ஆதார் அட்டை போலியானது என கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர்/வாதி எந்தவொரு ஆள்மாறாட்டம் செய்து வழக்கிடை சொத்தை கிரையம் பெறவில்லை. மேலும், எதிர்மனுதாரர்/வாதி நேரடியாக சண்முகபெருமாளிடமிருந்து வழக்கிடை சொத்தை கிரையம் பெறவில்லை. மேலும் இந்நிர் எதிர்மனுதாரர்/வாதி வழக்கிடை சொத்தை கிரையம் பெறும் முன்பு வில்லங்க சான்று பெற்று, சரிபார்த்து வருவாய்த்துறை ஆவணங்கள் 3ம் பிரதிவாதி பெயரில் இருந்ததால் சரியான பிரதிபிரயோஜனத்தின் பேரில் வழக்கிடை சொத்தை கிரையம் பெற்றுள்ளார்.

கடந்த 27.07.2022ம் தேதி சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மூ.மு.அ3/4789/2022 என்ற நடவடிக்கை மூலமாக வழக்கிடை சொத்தின் பட்டாவை ரத்து செய்தது சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு தாக்கல் செய்து மேற்படி சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவு பெற்றுள்ளார். அதற்கான உத்தரவு நகலை இத்துடன் தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகு தான் எதிர்மனுதாரர்/வாதி தாவா வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பிறப்பித்த உத்தரவை மறைத்த வழக்குமூலம் தவறாக காண்பிக்கப்பட்டதாக கூறி வழக்கை நிராகரிக்குமாறு

கோர மனுதாரருக்கு எந்த உரிமையும் இல்லை. கட்டளை 7 விதி 11ன்படி மனுவை மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்ய போதிய காரணங்கள் இல்லை. ஏற்கெனவே சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பிறப்பித்த உத்தரவானது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் 12.01.2023ம் தேதி ரத்து செய்யப்பட்டதால் மனுவானது மதுரை கிளையால் 12.01.2023ம் தேதி ரத்து செய்யப்பட்டதால் மனுவானது infatuation ஆகிவிட்டது. அந்த காரணத்திற்காக வழக்கை நிராகரிக்க கோருவது ஏற்புடையதல்ல. எனவே, மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவானது போதிய முகாந்திரமல்லாததால் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே, மனுவை எதிர்மனுதாரர்/வாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>*7). தீர்வு:-*</u>

**Order VII Rule 11-ல்**

***Rejection of Plaint*** *- The plaint shall be rejected in the following cases:*

*a). Where it does not disclose a cause of action*

*b). Where the relief claimed is undervalued and the plaintiff on being required by the court to correct the valuation within a time to the fixed by the court, fails to do so*

*c). where the relief claimed is properly valued but the plaint is written upon paper insufficiently stamped and the plaintiff on being required by the Court to supply the requistie stamp- paper within a time to be fixed by the Court, fails to do so.*

*d). where the suit appears from the statement in the plaint to the barred by any law*

*[e). where it is not filed in duplicate]*

*[f). where the plaintiff fails to comply with the provisions of Rule 9]*

*[Provided that the time fixed by the Court for the correction of the valuation or supplying of the requisite stamp-papers shall not be extended unless the Court, for reasons to be recorded, is satisfied that the plaintiff was prevented by any cause of an exceptional nature from correcting the valuation or supplying the requisite stamp-papers, as the case may be within the time fixed by the Court and that refusal to extend such time would cause grave injustice to the plaintiff.]*

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களில் என்ன காரணத்தினால் இவ்வழக்கு நிராகரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு கூறவில்லை. பொதுவாக வழக்குமூலம் மறைக்கப்பட்டுள்ளதால் வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்குமூலம் கிடையாது என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளார். சிபிசி ஆர்டர் 7 ரூல் 11ல் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக மட்டுமே வழக்கை நிராகரிக்க முடியும். மனுதாரர் எதிர்மனுதாரரின் வழக்கு என்ன காரணங்களினால் நிராகரிக்கப்பட வேண்டுமென பிராதின் அடிப்படையிலோ சட்டத்தின் அடிப்படையிலோ ஆவணங்களின் அடிப்படையிலோ குறிப்பிட்டு கூறி நிரூபணம் செய்யவில்லை. வழக்குமூலம் மறைக்கப்பட்டுள்ளதாக மட்டுமே சொல்லியுள்ள நிலையில் அதுகுறித்து மனுதாரர் தரப்பில் நிரூபணம் எதுவும் செய்யவில்லை. பிராதில் எதிர்மனுதாரர்/வாதியால் வழக்குமூலம் குறிப்பிட்டுள்ளது. வாதி குறிப்பிட்டுள்ள வழக்குமூலம் சரியானதா? இல்லையா? என்பதை வழக்கு விசாரணையின்போது மட்டுமே இந்த வழக்கைப் பொறுத்து இந்த சூழ்நிலையில் தீர்மானிக்க முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் ஏற்புடையதாக இல்லை. எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில்

ஏற்புடையதாக உள்ளது. மனுதாரரால் வாதி 27.07.2022ம் தேதி சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பிராது தபசில் கண்ட சொத்தை மோசடி ஆவணங்கள் தயார் செய்து வாதி மற்றும் 3ம் பிரதிவாதி கிரையம் செய்துள்ளபடியால், மேற்படி கிரைய ஆவணங்கள் ரத்து செய்ய உத்தரவு பிறப்பித்து உள்ளதை மறைத்தும், வழக்குமூலம் தவறாக உற்பத்தி செய்தும் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வாதியின் அசல் வழக்குரையை நிராகரித்து உத்தரவிட வேண்டி 28.06.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் அனுமதிக்க முடியாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மனுதாரரால் வாதி 27.07.2022ம் தேதி சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பிராது தபசில் கண்ட சொத்தை மோசடி ஆவணங்கள் தயார் செய்து வாதி மற்றும் 3ம் பிரதிவாதி கிரையம் செய்துள்ளபடியால், மேற்படி கிரைய ஆவணங்கள் ரத்து செய்ய உத்தரவு பிறப்பித்து உள்ளதை மறைத்தும், வழக்குமூலம் தவறாக உற்பத்தி செய்தும் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வாதியின் அசல் வழக்குரையை நிராகரித்து உத்தரவிட வேண்டி 28.06.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை மற்றும் தரப்பினர்களை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24ம் நாள்

இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதார்/1ம் பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதார்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.